# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1675 - 2010 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2010.10.08

*1675 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 92 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் உயர் நீதிமன்றம் - கொழும்பு

ஜீடீஐ பெஷன் வேர்ல்ட், வரையறுக்கப்பட்ட பிரத்தியேக ஸ்தாபனம், இல. 216/7ஏ, சிசிலா மாவத்தை, தெஹிவளை வீதி, மஹரகமை விடயத்தில் ;

வழக்கு இல. :
எச் சீ/சிவில்/
39/ 10/கொ.

அத்துடன்

கம்பனி சட்டத்தின் இல. 07-2007 பிரிவு 272(01) மற்றும் 273(01) ஆகியவற்றின்கீழ் நீதிமன்றத் தினால் மூடிவிடுவதற்கான விண்ணப்பம் விடயத்தில் ;

ஜீடிஐ பெஷன்வேர்ல்ட், வரையறுக்கப்பட்ட பிரத்தியேக ஸ்தாபனம், இல. 216/79, சிசிலா மாவத்தை, தெஹிவளை வீதி, மஹரகமை

.................. மனுதாரர்.

விண்ணப்பதாரரின் சார்பில் ரலபானவே அசோசியேட்டால் 2010, யூன் 28 ஆந் திகதி கொழும்பு கொமர்ஷல் உயர் நீதிமன்றத்தில் மேற்படி கம்பனியை மூடிவிடுவதற்கான விண்ணப்பம் இத்தால் அறியத் தரப்படுகிறது. மேற்படி விண்ணப்பம் 2010, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி நீதிமன்றத்தின் விசாரணைக்கு எடுக்கப்படுமென பணிக்கப் பட்டுள்ளது. மேற்படி கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்காளி மேற்படி விண்ணப்பம் குறித்து விசாரணையின்போது மன்றத்தில் ஆஜராகி உத்தரவுபெற்றுக்கொள்ள, அதற்காக ஆதாரம் காட்ட அவர் நேரிலோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ அதற்கான செலவுத் தொகையைச் செலுத்தி கடன் கொடுத்தவர் அல்லது பங்காளி ஆகியோருக்கு விண்ணப்பத்தின் பிரதி கீழ் கையொப்பமிட்டுள்ளவரால் வழங்கப்படும் :-

ரலபானவே அசோசியேட்ஸ் கம்பனிகள், சட்டத்தரணிகள்,
இல. 194, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரி.

**குறிப்பு.**- மேற்படி விண்ணப்பம் சம்பந்தமாக எந்த நபராவது விசாரணையின்போது தோன்றுவதற்கு விரும்பினால், அவர் தன்னுடைய பெயர், விலாசம் அல்லது ஒரு நிறுவனமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் பெயர், விலாசம் குறிப்பிட்டு அல்லது அவர்களின் சட்டத்தரணி கையொப்பமிட்டு 2010, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்கு பிற்படாதவாறு கிடைக்கக்கூடியதாக அல்லது தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ரலபானவே அசோசியேட்ஸ் கம்பனிகள்,
சட்டத்தரணிகள்.

10-303

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.